# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2194 - 2020 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.09.18

*2194 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 1044 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1046 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1043-B 82059 - 405 (2020/ 09)

# அரசாங்க அறிவித்தல்கள்

## சிவில் விமான சேவைகள் அமைச்சு

சிவில் விமான சேவைகள் அதிகார சபை

### 196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்

தனியார் செயற்பாட்டு (Private Operations) நடவடிக்கைகள், விமானத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் (Aerial work) மற்றும் உள்நாட்டுக் கூலி விமானப் போக்குவரத்து (Domestic Charter Operations) செயற்பாட்டு நடவடிக்கைகளான பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் விமான சேவைகளை முன்னெடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் விமானக் கம்பனிக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு சர்வதேச விமான நிலையம், இரத்மலானையில் உள்ள வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியினால் 2020, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி கொண்ட விண்ணப்பப்படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். விண்ணப்பப்படிவத்திற்கு அமைய வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

திரு. டி. ஏ. சீ. வீ. தாம்புகல
திருமதி எஸ். எம். சாந்தனி

இக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகள் தொடர்பாக பிரதான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு திரு. ஆர். எம். எச். வீ. ரத்னாயக்க அவர்கள் வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை கட்டுநாயக்க, மினுவன்கொட வீதி, இலக்கம் 152/ 1 ஐக் கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் 4 ஆவது மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொது மக்களுக்கு இதனைப் பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காகத் தேவையான விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ் (Air operator Certificate) உட்பட ஏனைய உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவைச் சட்டம் விமானப் போக்குவரத்துச் சேவையைப் போன்று உரிய தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் இணைந்த உள்நாட்டுத் தேவைகளுக்கு அமைய பாதுகாப்புமிக்க வினைத்திறனுடன் கூடிய விமானப் போக்குவரத்துச் சேவைகளை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளைக் கூட்டிணைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசோதனைகளை மேற்கொண்டு இவ்விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்துக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்களை விமானப் போக்குவரத்துக் கோவைக்கு அமைய எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளின் உண்மைத் தன்மையை எழுத்து மூல சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான விஞ்ஞாபனத்தை என்னிடம் சமர்ப்பிக்கும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்கச் செய்ய வேண்டியதுடன், அவ்வாறு அனுப்பப்பட்டதாக சான்றிதழை உரிய விஞ்ஞாபனத்துடன் இணைக்க வேண்டும்.

கப்டன் தேமிய அபேவிக்கிரம,
இலங்கை சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,
இலக்கம் 152/ 1, மினுவங்கொட வீதி,
கட்டுநாயக்க,
2020, செத்தெம்பர் 11.

09-700

## சிவில் விமான சேவைகள் அமைச்சு

சிவில் விமான சேவைகள் அதிகார சபை

### 196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்

சர்வதேச வழமையான பொதுப் போக்குவரத்துச் செயற்பாட்டு (International Regular Public Transport Operations) நடவடிக்கைகள் மற்றும் கூலி விமானப் போக்குவரத்து செயற்பாட்டு (Charter Operations) நடவடிக்கைகளான பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் விமான சேவைகளை முன்னெடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் விமானக் கம்பனிக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இல. 33/ 1, ஹல்பே மாவத்தை, கந்தானையில் உள்ள வரையறுக்கப்பட்ட ஸ்பார்க் எயார் (தனியார்) கம்பனியினால் 2020, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி கொண்ட விண்ணப்பப்படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். விண்ணப்பப்படிவத்திற்கு அமைய வரையறுக்கப்பட்ட ஸ்பார்க் எயார் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

கப்டன் ரொபர்ட் எல். ஸ்பிட்டல்
கப்டன் மொஹமட் ரம்ஸி ரஹீம்
கப்டன் சமீன் அத்தநாயக்க
கப்டன் அஷான் டி அல்விஸ்
திரு. சுரஞ்ஜன் டி சில்வா

இக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகள் தொடர்பாக பிரதான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு கப்டன் மொஹமட் ரம்ஸி ரஹீம் அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்பார்க் எயார் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை கட்டுநாயக்க, மினுவன்கொட வீதி, இலக்கம் 152/ 1 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் 4 ஆவது மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொது மக்களுக்கு இதனைப் பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காகத் தேவையான விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ் (Air operator Certificate) உட்பட ஏனைய உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவைச் சட்டம் விமானப் போக்குவரத்துச் சேவையைப் போன்று உரிய தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் இணைந்த உள்நாட்டுத் தேவைகளுக்கு அமைய பாதுகாப்புமிக்க வினைத்திறனுடன் கூடிய விமானப் போக்குவரத்துச் சேவைகளை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளைக் கூட்டிணைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசோதனைகளை மேற்கொண்டு இவ்விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்துக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்களை விமானப் போக்குவரத்துக் கோவைக்கு அமைய எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளின் உண்மைத் தன்மையை எழுத்து மூல சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான விஞ்ஞாபனத்தை என்னிடம் சமர்ப்பிக்கும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்கச் செய்ய வேண்டியதுடன், அவ்வாறு அனுப்பப்பட்டதாக சான்றிதழை உரிய விஞ்ஞாபனத்துடன் இணைக்க வேண்டும்.

கப்டன் தேமிய அபேவிக்கிரம,
இலங்கை சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,
இலக்கம் 152/ 1, மினுவங்கொட வீதி,
கட்டுநாயக்க,
2020, செத்தெம்பர் 10.

09-701

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020, யூலை 29 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட் டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும் PV 17612 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் தங்கல்லையில் கொண்டுள்ளதும் (இதனகத்துப் பின்னர் 'கம்பனி' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) தர்ஷன டிஜிட்டல் கலர் லப் (பிறைவேட்) லிமிட்டெட், டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு சேனக்க ஆர். அபேவிக்ரம என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, ஏப்பிறல் 18 ஆந் திகதிய 2063 ஆம் இலக்க ஈட்டு முறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

2020, யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக தொண்ணூற்றைந்து இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து ஐம்பத்தொன்பது ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 95,79,059.26) கொண்ட தொகையும், 2020, யூலை 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை தொண்ணூறு இலட்சம் ரூபா (ரூ. 90,00,000.00) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினது முதலாவது வேலை நாளன்று ஒவ்வொரு மாதமும் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) வட்டியும் மேற்சொல்லப்பட்ட 2063 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது சொல்லப்பட்ட தர்ஷன டிஜிட்டல் கலர் லப் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு வருமதியாகவும் சேர்மதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபை யானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கி களினால் கடன்களை மீள அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 2063 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, தொண்ணூற் றைந்து இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து ஐம்பத்தொன்பது ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 95,79,059.26) கொண்ட தொகையையும், 2020, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை தொண்ணூறு இலட்சம் ரூபா (ரூ. 90,00,000.00) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலை நாளன்று ஒவ்வொரு மாதமும் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் அதன் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத்தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டு முறி மூலம் கொகு ஹென்னடிகே தர்ஷன தேஷபிரிய என்பவரினால் டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித் கருணாரத்ன அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 2063 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவபத்து தெற்கில் தங்கல்லை பிரதேச சபை எல்லைகளினுள் தங்கல்லை பிரதேச செயலகத்தின் பள்ளிக்குடாவ கிராமிய (274) கிராம அலுவலர் பிரிவில் கொயம்பொக்கவில் அமைந்துள்ளதும் சிறிகதுரேவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். எல். கலப்பத்தி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1985.07.21 ஆந் திகதிய 3052A ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு 15 யினதாய் அதன் மீதுள்ள பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் மண்ணின் அம்முழுமையடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டு 15 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : அதே காணியின் காணித்துண்டு 16 ; கிழக்கு : கட்டுஅத்தரஹேன ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 14 ; மற்றும் மேற்கு : மூலக்காணியின் காணித்துண்டு 9 (வீதி). பரப்பளவில் இது, முப்பத்தாறு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 36பே.) கொண்டுள்ளதுடன் தங்கல்லை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். எல். கலப்பத்தி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.08.31 ஆந் திகதிய 4659A ஆம் இலக்க வரைபடத்தின்படி மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவபத்து தெற்கில் கொயம்பொக்கவில் அமைந்துள்ளதும் சிறிகதுரேவத்த

என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். எல். கலப்பத்தி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.08.31 ஆந் திகதிய 4659A ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு 15 இனதாய் அதன் மீதுள்ள பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் மண்ணின் அம்முழுமையடங்கலும் ; மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 15 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : அதே காணியின் காணித்துண்டு 16 ; கிழக்கு : கட்டுஅத்தரஹேன ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 14 ; மற்றும் மேற்கு : மூலக்காணியின் காணித்துண்டு 9 (வீதி) ; பரப்பளவில் இது, முப்பத்தாறு பேர்ச் (0ஏ. 0றூ. 36பே.) அல்லது மேற்கூறப்பட்ட 4659A ஆம் இலக்க வரைபடத்தின்படி 0.0912 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது.

அதே காணியின் காணித்துண்டு 26 இலும் அதன் மீதும் அது நெடுகிலும் (15 அடி அகலமான வீதி) மூலக்காணியின் காணித்துண்டு 9 (20 அடி அகலமான வீதி) இலும் அதன் மீதும் அது நெடுகிலும் ஏனைய பயன்படுத்துநர்களுடன் பொதுவாகப் பயன்படுத்துவதற்கான செல்வழியுரிமையுடனும் வேறெல்லா ஒத்த உரிமைகளுடனும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ.

9-453

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கிளை : கண்டி
டபிள்யூ. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2020, யூலை 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

''டபிள்யூ. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு/ வைத்தவர்களாகவும் மற்றும் டபிள்யூ. டி. ஆர். சமரகோன் ரியாலிட்டி (பிறைவேட்) லிமிட்டெட் அடகு வைத்தவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, ஒற்றோபர் 09 ஆந் திகதியிடப்பட்ட 4713 ஆம் இலக்க அடகு முறி தொடர்பாக இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது. ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் டபிள்யூ. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு இறக்குமதி கடனாக வழங்கப்பட்ட 161 மில்லியன் ரூபா வசதி வாய்ப்புக்களை மீளப் பெறுவதற்காக பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டது.

டபிள்யூ. டி. ஆர். சமரகோன் ரியாலிட்டி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் டபிள்யூ. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள் அதே பணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதுடன், அதே பணிப்பாளர்கள் பங்காளர்களாகவும் உள்ளனர். அதற்கு அமைய டபிள்யூ. டி. ஆர். சமரகோன் ரியாலிட்டி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் டபிள்யூ. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ கிளையினால் வழங்கப்பட்ட நிதி வசதி வாய்ப்புக்களை மீள வழங்குவதற்கான கடப்பாட்டைக் கொண்டவர்கள் என்பதுடன், உண்மையிலேயே சொல்லப்பட்ட வசதி மூலம் பயன் அடைபவர்கள்.

டபிள்யூ. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் டபிள்யூ. டி. ஆர். சமரகோன் ரியாலிட்டி (பிறைவேட்) லிமிட்டெட் வசதி வாய்ப்பு தொடர்பான இறக்குமதிக் கடனான ரூபா 161,000,000.00 தொடர்பான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதனால், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்தினால் 2020, பெப்புருவரி 12 ஆந் திகதியன்று உள்ளவாறாக சொல்லப்பட்ட முறிகள் மீது பத்தொன்பது கோடியே பதினொரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து எழுபத்து நான்கு ரூபா அறுபத்து ஐந்து சதம் (ரூபா 19,11,38,074.65) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதுடன், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான சொல்லப்பட்ட அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முறி இலக்கம் 4713 மூலம் அடகு வைத்த ஆதனங்களை விற்பனை செய்வதற்கு ஏற்றவகையில் மாற்றம் செய்யப்பட்டது மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான சொல்லப்பட்ட பத்தொன்பது கோடியே பதினொரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து எழுபத்து நான்கு ரூபா அறுபத்து ஐந்து சதம் (ரூபா 19,11,38,074.65) கொண்ட பணத்தொகையுடன் மேலும் 2020, பெப்புருவரி 13 ஆந் திகதி முதல் விற்பனை நாள் வரையிலான வருடாந்த வட்டி வீதத்திற்கு அமைய AWPLR + 2.5% மூலதன நிலுவையில் உள்ள ரூபா 161,000,000.00 உடன் விற்பனை நாள் வரை மேலும் விளம்பரச் செலவீனங்கள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து)

அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

1. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் உள்ள வகபனஹா பள்ளேசியபற்றுவில் உள்ள தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கும்புக்கன்தன்வெல - E488 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தம்புள்ளை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட குபுக்கன்தன்வெலவில் உள்ள மஹாகப்புயாய என அழைக்கப்படும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. எம். அனுரரத்னவினால் தயாரிக்கப்பட்ட 2009.11.03 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 4765 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு B என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் (நில குடியேற்றச் சட்டத்தின் கீழ் நில அளவை நாயகத்தினால் மெய்யுறுதி செய்யப்பட்ட வரைபட இலக்கம் VP 510 இல் உள்ள இணைக்கப்பட்ட 389, 390, 392, 393, 394, 395, 396, 397, 398, 399, 401, 402, 404, 405, 406, 407, 412, 413 ஆகிய காணித்துண்டுகள்)- வடக்கு : பிரதான வீதி மற்றும் வரைபட இலக்கம் 510 இல் உள்ள காணித்துண்டு 355 2/2 ; கிழக்கு : வரைபட இலக்கம் 510 இல் உள்ள காணித்துண்டுகள் 101 மற்றும் 403 ; தெற்கு: வரைபட இலக்கம் 510 இல் உள்ள காணித்துண்டுகள் 415, 414 மற்றும் 99 ; மேற்கு : காணித்துண்டுகள் 99, 411, 387, 388 மற்றும் 57. அத்துடன் முப்பத்தெட்டு ஏக்கர் மூன்று றூட் ஒன்பது பேர்ச் (38ஏ. 03றூ. 9பே.) விஸ்தீரணத்துடனான கட்டிடங்கள் மற்றும் அத்துடன் உள்ள எல்லாம்.

மாத்தளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் 17/ 137 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டது.

2. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் உள்ள வகபனஹா பள்ளேசியபற்றுவில் உள்ள தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குபுக்கன்தன்வெல - E488 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தம்புள்ளை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட குபுக்கன்தவெலவில் உள்ள மஹாகப்புயாய என அழைக்கப்படும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. எம். அனுரரத்னவினால் தயாரிக்கப்பட்ட 2009.11.02 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 4764A இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு A1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் (நில குடியேற்றச் சட்டத்தின் கீழ் நில அளவை நாயகத்தினால் மெய்யுறுதி செய்யப்பட்ட வரைபட இலக்கம் VP 510 இல் உள்ள இணைக்கப்பட்ட 353 1/ 2, 354, 355 1/ 2, 356, 357, 358, 360, 361, 362, 363, 364, 368 1/ 2, 368 2/ 2, 371, 372, 374, 376, 377, 378, 379, 380, 381, 382, 383, 385, 387, 388, 409, 411 மற்றும் 385) எல்லைகள்- வடக்கு: வரைபட இலக்கம் VP 510 இல் உள்ள காணித்துண்டு 355 2/2 ; கிழக்கு : காணித்துண்டுகள் 355 2/2, 57, 415, 389 மற்றும் வரைபட இலக்கம் VP 510 இல் உள்ள 412 ; தெற்கு: காணித்துண்டுகள் 389, 412, 99 மற்றும் வரைபட இலக்கம் 510 இல் உள்ள 386 ; மேற்கு : காணித்துண்டுகள் 99, 369, 64 மற்றும் வரைபட இலக்கம் 510 இல் உள்ள 353 2/2. அத்துடன் நாற்பத்தாறு ஏக்கர் ஒரு றூட் மற்றும் முப்பத்தொன்பது பேர்ச் (46ஏ. 1றூ. 39பே.) விஸ்தீரணத்துடனான கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். மாத்தளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் L17/ 130 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

08-464/ 1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கிளை : கண்டி
டபிள்யு. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2020, யூலை 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"டபிள்யு. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு/ அடகு வைத்தவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு கோலித்த எஸ். பண்டார விஜயரட்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, செத்தெம்பர் 23 ஆந் திகதியிடப்பட்ட 4646 ஆம் இலக்க அடகு முறி தொடர்பாக இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது. ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் டபிள்யு. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு தவணைக் கடனாக வழங்கப்பட்ட 15 மில்லியன் ரூபாவிற்கான பாதுகாப்பிற்கானது.

அத்துடன், டபிள்யு. டி. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் வசதி வாய்ப்பு தொடர்பான தவணைக் கடனான ரூபா 15,000,000.00 தொடர்பான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதனால், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்தினால் 2020, பெப்புருவரி 12 ஆந் திகதியன்று உள்ளவாறாக சொல்லப்பட்ட, முறி மீது ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து

இருபத்தொன்பதாயிரத்து இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 11,929,025.19) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதுடன், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான சொல்லப்பட்ட அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முறி இலக்கம் 4646 மூலம் அடகு வைத்த ஆதனங்களை விற்பதற்கு ஏற்றவகையில் மாற்றம் செய்யப்பட்டது மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான அடகு ஆதனத்தை சொல்லப்பட்ட ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 11,929,025.19) கொண்ட பணத்தொகையுடன் மேலும் 2020, பெப்புருவரி 13 ஆந் திகதி முதல் விற்பனை நாள் வரையிலான வட்டி வீதத்திற்கு அமைய AWPLR + 3.5% மூலதன நிலுவையில் உள்ள ரூபா 10,215,129.33 உடன் விற்பனை நாள் வரை மேலும் விளம்பரச் செலவீனங்கள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

1. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் உள்ள தம்புள்ள பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தம்புள்ள மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட தம்புள்ள நகரத்தின் கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட மாத்தளை வடக்கின் வகபஹுான பள்ளேசியபற்றுவில் உள்ள தம்புள்ளையில் உள்ள "தெஹிகஹாமுல்லயய கட்டுபொத்த" என அழைக்கப்படும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் ஈ. வீ. சிறிசுமனவினால் தயாரிக்கப்பட்ட 2007, யூலை 5 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 7650 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு: இக்னேஷியஸ் பர்ணாண்டோவினால் உரிமை கோரப்படும் அதே காணியின் பகுதி ; கிழக்கு : மாத்தளை-தம்புள்ளை பெருந்தெரு ; தெற்கு : இக்னேஷியஸ் பர்ணாண்டோவினால் உரிமை கோரப்படும் அதே காணியின் பகுதி ; மேற்கு : அகமட்டினால் உரிமை கோரப்படும் அதே காணியின் பகுதி. அத்துடன் பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.0253 ஹெக்டயார்) விஸ்தீரணத்துடனான எல்லாம். மாத்தளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் தொகுதி G பக்கம் L/ 54/ 93 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

09-464/ 2

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கிளை : பாதுக்க
சிஹாத் ஹவுசிங்ம (பிறைவேட்) லிமிட்டட்

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2020, யூலை 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"சிஹாத் ஹவுசிங் (பிறைவேட்) லிமிட்டட் கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். டி. ஏ. கே. அதிகாரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.07.15 ஆந் திகதியிடப்பட்ட 2748 ஆம் இலக்க அடகு முறி மூலம் வழங்கப்பட்ட கடன் தொடர்பான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதனால், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ. தாபனத்தினால் 2020, பெப்புருவரி 16 ஆந் திகதியன்று உள்ளவாறாக சொல்லப்பட்ட மூன்று கோடியே இருபத்துமூன்று இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து ஆறு ரூபா எண்பத்தாறு சதம் (ரூபா 32,343,006.86) கொண்ட பணத்தொகை ஒன்று, தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதுடன், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முறி இலக்கம் 2748 மற்றும் 5802 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட மூன்று கோடியே இருபத்துமூன்று இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து ஆறு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 32,343,006.86) கொண்ட பணத்தொகையை 2020, பெப்புருவரி 17 ஆந் திகதி முதல் விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துகுமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளேபற்றுவில் உள்ள கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நாரஹேன்பிற்றி கிராம அலுவலர்

பிரிவிற்கு உட்பட்ட நாரஹேன்பிற்றியில் உள்ள எலிவிற்றிகல மாவத்தையில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 131/ 3 ஐக் கொண்டுள்ளதுடனான காணியுடன் கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம்பெற்ற நில அளவையாளர் ஐ. எம். சீ. பர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 1992, மே 10 ஆந் திகதியிடப்பட்ட (மிகச் சரியாக 1991, நவெம்பர் 19) வரைபட இலக்கம் 1109 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 6 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு : இத்துடனான காணித்துண்டு R3 ; கிழக்கு : எல்விற்றிகல மாவத்தை, G117 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள வளவுகள் ; தெற்கு : இத்துடனான காணித்துண்டு 5 ; மேற்கு : இத்துடனான காணித்துண்டு R2 மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1109 இற்கு அமைவான பன்னிரண்டு தசம் நான்கு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 12.44பே.) விஸ்தீரணத்துடனானது, கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் E111/ 21 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

09-464/ 3

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

எச். எம். ஏ. பீ. ஜயரத்ன மற்றும் கே. ஐ. ஹெட்டிஆரச்சி
கணக்கு இல.: 1140 5766 1194

2020, யூலை மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் :

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான ஏ. ஏ. ஆர். உதயங்க என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, ஒகத்து 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 525 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஹேரத் முதியன்சேலாகே அமில பிரசாத் ஜயரத்ன மற்றும் கல்பனி ஹிரந்தி ஹெட்டிஆரச்சி என்பவர்களில் கடன்பட்டவர் எனும் வகையில் கூறப்பட்ட ஹேரத் முதியன்சேலாகே அமில பிரசாத் ஜயரத்ன மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 525 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ஒரு கோடியே இருபத்தொரு இலட்சத்து எண்பதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்றாறு ரூபா இரண்டு சதம் (ரூ. 1,21,80,696.02) 2020, யூன் 25 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே இருபத்தொரு இலட்சத்து எண்பதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்றாறு ரூபா இரண்டு சதம் (ரூ. 1,21,80,696.02) 2020, யூன் 26 ஆந் திகதி முதல் இல. 525 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே பன்னிரண்டு இலட்சத்து பதினோராயிரத்து முந்நூற்றெண்பது ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 1,12,11,380.29) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 525 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே கங்கபட பத்துவை தொம்பெ பிரதேச சபை எல்லைகளுக்குள் (வக்கெ உப அலுவலகம்) வக்கெ பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் மிள்ளதே- 386 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவின் உடகம கிராமத்தில் அமைந்த "உடுமுள்ளவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எம். சந்ரசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2009, செத்தெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 4066 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 20A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இதே காணியின் லொட் 18 ; கிழக்கு: இதே காணியின் லொட் 59 (வீதி) ; தெற்கு : இதே காணியின் லொட் 23 மற்றும் மேற்கு : சங்கமித்த வித்தியாலயத்தின் காணி மற்றும் இதே காணியின் லொட் 18 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினான்கு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 14.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட

இல. 4066 எனும் வரைபடத்திற்கு அமைவாக அத்தனகல்ல காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் 50/ 03 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-468

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2019, ஒற்றோபர் 22 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

“(கடன்பெறுநர்களான) இருவரும் கெங்கல்லவைச் சேர்ந்த குறுப்பு ஆராச்சிகே கிஹான் தனுஷ்க வீரசிங்க மற்றும் டில்ஷா நிமந்தி கட்டவலகும்புர என்போர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் (வங்கி) கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) உபேகா பியூமாலி குமாரி தென்னகூன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.01.18 ஆந் திகதிய 193 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் ஈடுவைக்கப்பட்டு அடமானம் வைக்கப்பட்டவையும் இதற்கான அட்டவணையில் கீழே மேலும் விபரமாக விவரிக்கப்பட்டவையுமான ஆதனங்களினதும் வளவுகளினதும் பிணைப்பொறுப்புக்கெதிராக வழங்கப்பட்ட கடன்களின் மீது /வசதிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்தவதில் தவணைதவறியுள்ளனராதலாலும்.

அத்துடன் டில்ஷா நிமந்தி கட்டவலகும்புர என்பவர் கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனங்களுக்கும் வளவுகளுக்குமான தமது இறையிலி உரிமையையும் உரித்தையும் அக்கறையையும் சொல்லப்பட்ட 193 ஆம் இலக்க ஈட்டுமுறியின்கீழ் வங்கிக்கு ஈடுவைத்துள்ளாராதலாலும்.

அத்துடன் 2019 யூலை 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக எழுபத்து மூன்று இலட்சத்து அறுபத்திரெண்டாயிரத்து நூற்றி நான்கு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ.73,62,104.56) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது (இதனகத்துப்பின்னர் கூட்டாக முதன்மைச் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட முறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையும் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவையுமான ஆதனங்களும் வளவுகளும் சொல்லப்பட்ட எழுபத்து மூன்று இலட்சத்து அறுபத்திரெண்டாயிரத்து நூற்றி நான்கு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 76,32,104.56) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் சொல்லப்பட்ட 193 ஆம் இலக்க முறியினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 193 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வங்கிக்கு வருமதியாகவுள்ளதுமான அறுபத்திரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து தொண்ணூற்றேழு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 62,19,097.59) கொண்ட தொகை மீது எல்லாம் 2019, ஓகத்து 1 ஆம் நாளிலிருந்து விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பது சதவீத (30%) வட்டியையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏல மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது”.

#### அட்டவணை

மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் உடகம்பஹாக் கோறளையின் மொணறாகலைப் பத்துவிலும் குண்டசாலைப் பிரதேச செயலாளர் பிரிவிலும் குண்டசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவினுள் ஹென்வலயில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மண் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து கொவிபொலவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 1991, மாச்சு 1 ஆந் திகதிய மஹா 3578 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டு 37 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டு 37 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : இதன் காணித்துண்டு 9 மற்றும் 34 ; கிழக்கு : இதன் காணித்துண்டு 34 மற்றும் மஹா 287 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு 1 ; தெற்கு : மஹா 287 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு 1 மற்றும் இதன் காணித்துண்டு 38 ; அத்துடன் மேற்கு : இதன் காணித்துண்டு 38 மற்றும் 9. பரப்பளவில் இது சொல்லப்பட்ட வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட எல்லா வீதி வழிகளையும் பயன்படுத்துவதற்கான உரிமையுடன் சேர்த்து, சொல்லப்பட்ட மஹா 3578 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தின்படி பூச்சியம் தசம் பூச்சியம் ஆறு நான்கு ஹெக்டயார்களை (0.064 ஹெக்டயார்) கொண்டுள்ளதுடன் கண்டி காணிப்பதிவகத்தில் E 647/234 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உடகம்பஹா கோறளையின் மொணறாகலைப் பத்துவிலும் குண்டசாலைப் பிரதேச செயலாளர் பிரிவிலும் குண்டசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவினுள் ஹென்வலவில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மண் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து கொவிபொலவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் யூ. கே. கே. ஏக்கநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017, ஒற்றோபர் 22 ஆந் திகதிய மஹா 1521 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டு 1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டு 1 பின்வரும் எல்லைகளையுடையது– வடக்கு : நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட மஹா 3578 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 9 மற்றும் வீதி ; கிழக்கு : நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட மஹா 3578 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 34 ; தெற்கு : மஹா 287/1 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு 1 மற்றும் மேற்கு: நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட மஹா 3578 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 38 பரப்பளவில் இது, மஹா 3578 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட எல்லா வீதி வழிகளையும் பயன்படுத்துவதற்கான உரிமையுடன் சேர்த்து சொல்லப்பட்ட 1521 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்துநான்கு தசம் மூன்று சைபர் பேர்ச்சுக்களை 0ஏ. 0றூ. 24.30பே. அல்லது 0.0614 ஹெக்டயார்களைக் கொண்டுள்ளது.

சாதனத்துடன் மின்சார வழங்கல் முறைமை, நீர் வழங்கல் முறைமைச் சாதனம், தொலைத்தொடர்புச் சாதனம் மற்றும் காற்றுச்சீராக்கற் சாதனம் உட்பட, மேலே மேலும் விபரமாகக் குறிப்பீடு செய்யப்படும் சொல்லப்பட்ட காணித்துண்டுடன் இப்போது இணைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட அல்லது இதன் பின்னர் காலத்துக்குக் காலம் இணைக்கப்படக்கூடிய அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும் சாதனம் பொருத்திகள், இணைப்புக்கள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் அவற்றைத் தனித்தனியாகவும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

09-499

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.